RTROP.NO.287/2022 – 09.01.2025

CW1 – விமல்ராஜ்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நிலம் ஆர்ஜிதம் செய்த சிக்கம்பட்டி தாரமங்கலத்திற்கும் ஓமலுருக்கும் நடுவில் உள்ளது என்றால் சரி. நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு முன்னர் நிலத்தின் ஓரமாக சென்ற நெடுஞ்சாலையை அகலப்படுத்துவற்காக நிலம் எடுக்கப்பட்டது என்றால் சரி. எனக்கு அந்த இடத்தில் எவ்வளவு பாத்தியம் என்றால் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட 1.5 ஏக்கரில் எனக்கு 50 செண்ட் பாத்தியம். சொத்து பூர்விக சொத்து என்றால் சரி. இந்த நிலங்களில் என்ன விவசாயம் செய்கிறேன் என்றால் முன்பகுதியை கடை கட்டுவதற்காக வைத்துள்ளேன். கடை கட்டியது போக மீதி நிலங்கள் விவசாய நிலங்கள் என்றால் நிலம் ஆர்ஜிதம் செய்தது போக குறைவாகதான் நிலம் உள்ளது. எவ்வளவு மீதி நிலம் உள்ளது என்றால் 36 செண்ட் உள்ளது.

எனது நிலத்திற்கு பக்கத்தில் உள்ள நிலங்களில் மனை நிலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறுவதற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்றால் சரி. எனது நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு முன்னரோ பின்னரோ மனை நிலமாக வகைப்படுத்தப்பட்டதா என்றால்

இல்லை. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலமும், நான் அதிக இழப்பீடு கேட்டு மேற்கோள் காட்டி உள்ள நிலமும் ஒரே வகைப்பாட்டை சார்ந்தது என்பதை காட்ட ஆவணம் ஏதும் இல்லை என்றால் சரி. தாசில்தார் விசாரணையில் நான் கலந்து கொண்டேனா என்றால் கலந்துகொண்டேன். நில ஆர்ஜித அதிகாரியிடம் நான் காண்பித்த ஆவணங்களையே நீதிமன்றத்திலும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. எனக்கு சொத்து எந்த பத்திரம் மூலம் பாத்தியப்பட்டது என்றால் என் பாட்டி விலைக்கு வாங்கிய சொத்து. பின்னர்பாட்டி உயிருடன் இருந்தபோது 2000ம் ஆண்டில் எனது பெயருக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தார்.

மேற்படி தானசெட்டில்மெணட் பத்திரம் Ex.C4 ஆக குறியீடு செய்யப்பட்டுளள்து. மேற்படி பத்திரம் 1.5 ஏக்கருக்குரியது என்றால் சரி. அந்த பத்திரத்தில் 1.5. ஏக்கரின் முழு மதிப்பு ரூ.1,35,000/–என்று சொல்லப்பட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. நிலம் ஆர்ஜிதம் செய்த சமயத்தில் பத்திரத்தில் உள்ள மதிப்பேதான் தொடர்ந்து உள்ளது என்றால் சரியல்ல. ரோடு அகலப்படுத்துவதற்கு முன்னர் அந்த பகுதியில் எந்த ஒரு வளர்ச்சியும் இல்லாமல் இருந்த கிராமம் என்றும், அந்த நிலத்தின் விலை மதிப்பு குறைவாகதான் இருந்தது என்றால் சரியல்ல. நான் அதிக இழப்பீடு கோருவதற்கு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யாததால் அதிக இழப்பீடு கோர எந்த முகாந்திரமும்

இல்லை என்றால் சரியல்ல. எனது நிலத்திலிருந்து 1.6 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள அதிக பட்ச விலைதான் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது கோரிக்கை நிராகரிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.